கிறிஸ்துவின் தூது

தே.ஆ.தங்கசாமி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கிறிஸ்துவின் தூது

தே. ஆ. தங்கசாமி

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
(in association with the United Society for Christian Literature)
POST BOX 501, PARK TOWN, MADRAS 3

COPYRIGHT

H.D. 70/Tam. 5

First printed, 1970

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1970. [illegible]

1. கிறிஸ்துவுக்காகத் தூது

தூது செல்ல அழைப்பு

மிஷன் என்ற ஆங்கிலச் சொல்லைக் கேட்டிருப்பீர்கள். திருச்சபையைப்பற்றித் தமிழிலும் பிற மொழிகளிலும் பேசுமிடத்து இந்த மேலை நாட்டுச் சொல் இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி அச்சொல்லின் பொருள் மாறுபட்டிருப்பதையும் நாம் காணலாம்.

'மிஷன்' என்ற சொல்லுக்கு 'அனுப்பப்படுதல்' அல்லது 'தூதாகச் செல்லல்' என்று பொருள். எனவே 'மிஷன் வீடு,' 'மிஷன் கட்டிடம்' என்றெல்லாம் கூறுவது 'மிஷன்' என்ற சொல்லை மாறுபட்ட பொருளில் கையாளுவதாகும். 'மிஷன்' என்ற சொல் வேறு பல நிலைகளிலும் இக்காலத்தில் பயன்படுத்தப்படுகிறது. வாணிப நோக்கத்துடனோ, கலைகளை விளம்பரப்படுத்தும் எண்ணத்துடனோ ஒரு நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டிற்கு அனுப்பப்படும் மக்களை அச்சொல்லால் அழைப்பது அதன் பொருளைத் தெளிவுபடுத்துகின்றது. தமிழில் அதை 'தூது செல்லல்' அல்லது 'தூதாகச் செல்லல்' என்று மொழிபெயர்க்கலாம்.

ஒரு நாட்டிலிருந்து, இன்னொரு நாட்டிற்கு அரசாங்கத்தால் அனுப்பப்படும் தூதுக் குழுவுக்கும் திருச்சபைக்கும் பொதுவான மூன்று தன்மைகளை நாம் காணலாம்:

1. ஒரு குழுவினரைத் தெரிந்துகொள்வது.

2. அனுப்பப்படுபவர்கள் தங்களுடைய விருப்பப்படி தூதுப் பணியைச் செய்யாமல் தங்களை அனுப்பும் அரசாங்கத்தின் அல்லது நாட்டின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அதைச் செய்வது.

3. அப்பணியின் நோக்கம் அவர்கள் செல்லும் நாட்டின் போக்கில் அல்லது சிந்தனையில் ஒரு மாறுதலை உண்டுபண்ணு வது அல்லது அந்த நாட்டினரைத் தங்கள் நாடு அல்லது அரசாங்கம் விரும்புமாறு நடந்துகொள்ளச் செய்வது எனலாம்.

1. தெரிந்துகொள்ளல்

கடவுள் ஒரு சனத்தைத் தெரிந்துகொள்கிறார்.

ஆதி. 1:1–3.

யாத். 6:7.

ஏசா. 45:4 (b).

ஆனால் கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேலர் அவருடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை.

எரே. 13:10,11.

ஏசா. 65:2,15.

எனவே, அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். அழைப்பு மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அந்த மற்றவர்களே திருச்சபை என்ற பொதுப்பெயரால் குறிப்பிடப்படுகிறார்கள். அவர்களைப் புதிய இஸ்ரவேலர் என்று குறிப்பிடுவதும் உண்டு.

யோ. 15:16.

அப். 22:10; 9: 15.

1 பே. 2:9,10.

உலகக் காரியங்களுக்காகத் தூது செல்லும்படியாக மக்கள் தெரிந்துகொள்ளப்படுவதற்கும், கடவுள் மக்களைத் தெரிந்து கொள்வதற்கும் ஒரு பெரிய வேறுபாடு இருக்கிறது. உலகத் தில் மக்கள் தகுதியின்படி தேர்ந்துகொள்ளப்படுகிறார்கள். அப்படித் தெரிந்துகொள்ளப்படவில்லையென்றால் அது 'நீதிக்கு விரோதமானது' என்று கண்டிக்கப்படுகிறது. ஆனால் திரு மறையில் கடவுள் தகுதியின்படி மக்களைத் தெரிந்துகொள்ள வில்லையென்று காண்கிறோம். பண்பாட்டிலும், கலைகளிலும் அக்காலத்தில் மேம்பட்ட நிலையிலிருந்த ஆரியர், எகிப்தியர்,

பாபிலோனியர் ஆகியோரைக் கடவுள் தெரிந்துகொள்ள வில்லை. பின்தங்கிய மக்கள் என்று கருதப்பட்ட மக்களான இஸ்ரவேலரையே அவர் தெரிந்துகொண்டார். மோசே, பேதுரு போன்ற தனி மக்களையும் கடவுள் தெரிந்துகொண்ட பொழுது அது அவர்களுக்கே வியப்பைக் கொடுத்தது.

யாத். 4:10.
உபா. 7:7.
ரோ. 9:10–13.
1 கொ. 1:26,27.

2. கட்டளை

தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் கடவுளின் சார்பாகத் தூது செல்லக் கட்டளை பெறுகிறார்கள்.

சிறப்பான சலுகைகளைப் பெறுவதற்காக இஸ்ரவேலர் அழைக்கப்படவில்லை. தாங்களாக ஒரு குறிக்கோளைத் தெரிந்துகொள்ளவும், அதை நிறைவேற்றவும் அவர்களுக்கு உரிமை கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு ஒரு பணி கொடுக்கப்படுகிறது. அப்படியே, அழைக்கப்படும் தனிப்பட்ட மக்களுக்கும்கூடத் தூது செல்லும் பணி அவர்கள் கடமை யாகின்றது.

யாத். 4:12; 6:11; 10:1 (a).
யோனா 1:2; 3:2.
மத். 10:6,16 (a); 28:19.
அப். 22:21.
யோ. 4:34.

கடவுளால் அழைக்கப்படும் மக்கள் எங்கு இருந்தாலும் அந்த இடத்திலிருந்தே அனுப்பப்படுகின்றனர். இயேசு, தாமும்கூட அனுப்பப்பட்டவர் என்பதை அடிக்கடி நினைவூட்டி னார். 'போ,' 'அனுப்புகிறேன்' என்ற சொற்கள் மேலே காட்டியுள்ள வசனங்களில் அடிக்கடி வருவதை நாம் காணலாம்.

3. தூது செல்லல்

இதர மக்களுக்கிடையே வாழ்க்கை நடத்துதல் மட்டும்கூடத் தூதுப் பணியாகக் கருதப்படலாம். ஏனென்றால், அதனாலேயே

கூட மாறுதல்கள் ஏற்படலாம். இயேசுவானவர் சென்ற விடங்களிலெல்லாம் மாறுதல்கள் உண்டாயின. பலர் மனச் சான்றினால் குத்தப்பட்டனர். சகேயுவைப் போன்ற பலர் புது வாழ்க்கைக்குள் புகுந்தனர்.

ஆதி. 12:3.
லூ. 19:7–9.
மத். 9:25; 17:18,19.
அப். 19:11,12,26,27.
மத். 5:13–16.

அவர்கள் கிறிஸ்துவின் அடியார்களாக அழைக்கப்பட்டுள்ளது எதற்காக? உலகத்திற்கு உப்பையும் வெளிச்சத்தையும் வேறு எங்கிருந்தாவது எடுத்துச் செல்லவேண்டும் என்பதற்காக இல்லை. தாங்களே உப்பாகவும் வெளிச்சமாகவும் இருப்பதற்காகத்தான் அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். எனவே திருச்சபை 'தூது செல்வதற்காக' அல்ல; தானே 'தூதாக இருப்பதற்காக'த் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது என்று அறிஞர் கூறுகின்றனர்.

கிறிஸ்து செல்கின்ற இடங்களிலெல்லாம் மாறுதல்கள் ஏற்படவேண்டும்தான். ஆயினும், கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவ மார்க்கமும் மட்டும் சென்றுள்ள இடங்களிலெல்லாம் அத்தகைய மாறுதல்கள் உண்டாகிவிடவில்லை. சாதி வேற்றுமை, மூடப் பழக்கங்கள் முதலிய தீமைகள் பல, சபைகளிலேயே இன்னும் நிலைத்து இருந்துவருகின்றன.

ஆனால் சமுதாயத்தைச் சீர்ப்படுத்தவும், உலகத்தைப் பண்படுத்தவும் கிறிஸ்தவர்களுக்குச் சிறப்பான பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. 12ஆம் பையஸ் என்ற போப்பானவர் (Pope Pius XII) கூறியுள்ளபடி 'மானிட சமுதாயத்தில் திருச்சபை உயிர்ச் சக்தியாக (ஆற்றலாக) அமைகின்றது.'

> எவன்ஸ்டனில் கூடிய அனைத்துலகக் கிறிஸ்தவ சபைகளின் மன்றம் கீழ்க் கண்டவாறு கூறியுள்ளது: 'இக்கால மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினையின் ஒவ்வொரு பகுதிக்கும் உலகத்திற்கு நம்பிக்கை அளிக்கும் கிறிஸ்துவின் ஆட்சி எப்படிச் சிறப்பாகப் பொருந்துகிறது என்பதை எடுத்துக்காட்டுவதே திருச்சபையின் பணி.'

'டீ ஷார்டின்' (De Chardin) என்ற அறிஞர் உலகமும், வாழ்க்கையும் கிறிஸ்தவ மக்களின் கைகளில் கொடுக்கப் படுவதையும், நற்கருணை விருந்தில் அப்பம் அவர்கள் கைகளில் கொடுக்கப்படுவதையும் ஒப்பிட்டுள்ளார்.

இஸ்ரவேலரைப்போலவே, திருச்சபையும்கூடத் தன்னுடைய பொறுப்பை உணராது நெடுங்காலம் வாழ்ந்து வந்துள்ளது. பவுல் அப்போஸ்தலனாகிய பவுலினுடைய ஆதி கால எச்சரிப்பு இன்றைய திருச்சபைக்கும் பொருந்தும்.

ரோ. *11:17,18.*

தற்காலக் கிறிஸ்தவ மக்களில் ஒருசிலர் திருச்சபையின் முழுப் பொறுப்பையும் உணர்ந்துள்ளனர். அவர்களில் சிறந்த ஒருவர் 'ஹிட்லரின்' ஆதிக்கத்தைக் கண்டித்ததால் சிறையிலிடப் பட்டுப் பின் தூக்கிலிடப்பட்ட 'பான்கோபர்' என்னும் பெரியார். அவர் கிறிஸ்தவ மார்க்கத்தின் சிறப்பு 'இவ் வாழ்க்கையிலிருந்து விடுதலை பெறும் மீட்பின் வழி என்பதன்று' என்று கூறிப் பின்வருமாறு எழுதுகிறார்:

> 'சுவிசேடங்களும், புனிதர் பவுலும் கிறிஸ்தவத்தின் தனிச்சிறப்பு என்று எடுத்துக்காட்டுவது இதுவா? இல்லை யென்று உறுதியாக நான் சொல்வேன். கிறிஸ்தவ அடிப் படையில் எழும் உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்கும், புராணங்களின் அடிப்படையில் எழும் நம்பிக்கைக்கும் உள்ள வேறுபாடு இதுதான், கிறிஸ்தவ நம்பிக்கை பழைய ஏற்பாட்டில் காட்டியிருப்பதைப் பார்க்கிலும் திட்டவட்ட மான முறையில் ஒரு மனிதனைத் திரும்பவும் முற்றும் புதிய வழியில் இவ்வுலக வாழ்க்கைக்குள் புகுத்துகிறது.'

4. தூதரின் நிலை

அரசாங்கங்களால் அனுப்பப்படும் தூதுக் குழுக்களுக்கும், ஆண்டவரது தூதுக் குழுவான திருச்சபைக்கும் பொதுப்படை யான மூன்று தன்மைகளைக் குறிப்பிட்டோம். ஆனால், திருச் சபையைப்பற்றிய மற்றொரு தன்மையையும் இங்கே குறிப்பிட வேண்டும். அதுதான் அனுப்பப்படும் திருச்சபைக்குக் கொடுக்கப்படும் ஒரு தனிச் சிறப்பான 'இடம்' அல்லது 'நிலை.'

(அ) முதலாவதாகக் கடவுளுக்காகத் தூது செல்பவருக்கு ஒரு பெருமையான நிலை கொடுக்கப்படுகிறது.

யாத். 19:5,6.
உபா. 7:6.
1 பே. 2:9,10.

(ஆ) அவர்கள் வேறுபடுத்தப்பட்டார்கள்.

லேவி. 20:24 (c) 26.
பிலி. 3:20 (b).
யோ. 17:16.

உயர்ந்த இடத்தை நாம் எல்லோரும் விரும்பலாம். ஆனால் நம்மைத் 'தனிப் பேர்வழி' அல்லது 'ஒருவகையான ஆள்' என்று பிறர் சொல்வதை நாம் விரும்புவதில்லை. அவ்வாறே, இஸ்ரவேலரும் தாங்கள் இதர மக்களைப் போலவே இருக்க வேண்டுமென்று விரும்பினார்கள். 'ஒரே கடவுளையே வணங்க வேண்டும், விக்கிரகங்களை உண்டுபண்ணவும் வணங்கவும் கூடாது' என்பவை அவர்களுக்கெல்லாம் பிடிக்கவில்லை. பிற நாட்டினரைப் போலவே, தாங்களும் பல தெய்வங்களை வழிபடவேண்டுமென்றும், தங்களுக்கும் ஓர் அரசன் வேண்டுமென்றும் அரசனையொட்டிய எல்லா ஆடம்பரங்களும் தங்களுடைய நாட்டிலும் இடம்பெற வேண்டுமென்றும் அவர்கள் விரும்பினார்கள். சாமுவேல் முனிவரிடம் அவர்கள் சென்று தங்களுக்கு ஓர் அரசனை நியமிக்கவேண்டுமென்று அவர்கள் பிடிவாதமாகக் கேட்டார்கள்.

1 சாமு. 8:19–21.

கிறிஸ்தவர்கள் 'உலகத்தாரல்லர்' என்பதை அடிப்படையாகக் கொண்டு, சிலர் சில சமயங்களில் கிறிஸ்தவர்கள் உலகத்தைவிட்டுப் பிரிந்திருக்க வேண்டுமென்று அவர்களுக்குக் கூறுகிறார்கள். ஆனால் எந்த வழிகளில் அவர்கள் பிரிந்திருக்க வேண்டுமென்று அவர்களுக்கு விளக்கம் கொடுக்கப்படாததால், கிறிஸ்தவர்களுக்குள் பல தப்பெண்ணங்கள் எழுகின்றன. எடுத்துக்காட்டாகக் கிறிஸ்துவுக்குப்பின் மூன்றும் நூற்றாண்டில் துறவிகளின் இயக்கம் தோன்றியது. அப்போது குளிப்பதும், கெட்டுப்போகாத ஆகாரத்தைச் சாப்பிடுவதும் கூட உலகத்தில் ஈடுபடுவதாகும் என்ற எண்ணம் நிலவி

வந்தது. ஆகவே அவற்றைப் பாவமென்று பல துறவிகள் கருதினர். எனவே எந்த வழிகளில் கிறிஸ்தவர்கள் தனித்தன்மை உள்ளவர்களாக இருக்கவேண்டுமென்பது சிந்தனைக்குரியது.

(இ) உடன்படிக்கையின் மக்கள்

இஸ்ரவேலரோடு முற்காலத்திலும், அதன்பின்னர் திருச்சபையோடும் கடவுள் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளார் என்று திருமறையில் காண்கிறோம்.

யாத். 19:5.
உபா. 7:8,9.
இஸ்ரவேலருக்கு ஓர் எச்சரிப்பும் கொடுக்கப்படுகிறது.
உபா. 8:19,20.

ஆனால் கடவுளுடைய அன்பு யாருடைய அழிவையும் விரும்பாத அன்பு. ஆகையால் உடன்படிக்கைபண்ணின கடவுள் உண்மையும், பொறுமையுமுள்ளவராக இருக்கிறார். தாம் தெரிந்துகொண்ட மக்கள் தவறிப்போனாலும், அவர் தவற மாட்டார்.

1 சாமு. 12:20,22.
ஓசியா 2:19–20.
2 தீமோ. 2:13.
எபி. 10:23 (b).
1 யோ. 1:9.

அக்காலங்களில் கிரேக்க, ரோம தெய்வங்களை வழிபட்ட மக்கள் மனிதன் மட்டுமே தெய்வங்களுக்கும் நீதிநெறிக்கும் கீழ்ப்படியவேண்டுமென்றும், தெய்வங்கள் தம் மனம்போல நடக்கலாமென்றும் எண்ணி வந்தனர். ஆனால் இயேசுவானவரின் பிதாவாகிய கர்த்தர் மக்கள் அனைவரும் உண்மையையும் அறத்தையும் விட்டு விலகிப்போனாலும்கூடத் தாம் மாருதவர்.

2. தூதுப்பணியை ஏற்றுக்கொள்ளல்

1. அழைப்பு கட்டளையாக மாறுகிறது

தங்களுடைய தூதுப்பணி என்னவென்பதைப்பற்றித் திருச்சபையோ, அதன் மக்களோ தாங்களே முடிவு செய்வதில்லை. அத்துடன் தாங்கள் தகுதியற்றவர்கள் என்று எண்ணித் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பணியை அவர்கள் மறுக்கவும் முடியாது. அந்த எண்ணம் ஏற்படாமலிருக்கவும் முடியாது.

யாத். 3:11; 4:10–12.

ஏசா. 6:5.

அப். 22:19–21.

தூது செல்லவேண்டிய மக்கள் தாங்கள் தகுதியற்றவர்கள் என்று தயங்கினாலும் கடவுள் வற்புறுத்துகிறார்; அதை நிறைவேற்றியாக வேண்டும். எனவே மேலோட்டமாகப் பார்க்கும்போது தூதுப்பணியை மேற்கொள்ளுவதாவது படையில் மக்கள் கட்டாயமாகச் சேர்க்கப்படுவது போன்றும், அடிமைகள்போல் வேலை சுமத்தப்படுவதைப் போன்றும் தோன்றலாம். திருமறையிலும் இவ்விரு உவமைகளும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

1 கொ. 7:22.

எபே. 6:10–17.

நாம் திருவினைக்குச் 'சாக்கிரமந்து' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். அச்சொல் ரோம அரசாங்கத்தில் படையில்

சேருவோர் கொடுக்கும் வாக்குறுதியைக் குறிக்கும் சொல்லாகும். ஞானஸ்நானம் அல்லது திருமுழுக்கு ஒரு சாக்கிரமந்து. அதைப் பெறுபவர் கிறிஸ்துவின் போர்வீரராக வாழ வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லப்படுகிறது. இதுவும் திருச்சபை முழுவதும் ஒரு படை என்பதைக் காட்டுகிறது. அதை ஊழியர் படை (task force) என்று கூறலாம். ஒரு படையில் கோழைகள், சோம்பேறிகள் போன்றவர்களும்கூட இருக்கலாம். ஆனல் படையில் சேர்ந்த யாவரும் வீரராகவே பணியாற்ற வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

2. அழைப்புக்கு இணங்குதல்

கடவுள் கொடுக்கும் பொறுப்பு பளுவானது. எனவே அழைப்புக்கிணங்க மறுப்பதைப்பற்றியோ, தயங்குவதைப் பற்றியோ வியப்படைய வேண்டியதில்லை. கடவுளால் கொடுக்கப்பட்ட பொறுப்பை விரும்பாததால் யோனு மற்ரெரு தூதைத் தெரிந்துகொள்ள முயலுகிறுன்.

யாத். 32:7–12.
மத். 19:21,22.
ஆமோஸ் 3:2.
யோனு 1:2,3; 4:2.

ஆனல் பொறுப்பு பெரியதாக இருந்தாலும் கடவுள் அதை நிறைவேற்றுவதற்குரிய முழு வலிமையையும் கொடுப்பதாக வாக்களிக்கிறுர்.

யாத். 3:12 (a).
மத் 28:20 (b).
அப். 1:8.

3. தூது செல்லும் மக்கள்

சமுதாயத்தில் எந்த இயக்கத்திலும் மக்களைச் சேர்ப்பதின் நோக்கம் இதுதான். உறுப்பினரது ஒற்றுமையின் மூலம் அந்த இயக்கம் வலிமையுற்று, அதன் நோக்கங்களை அடைவதற்கு ஏற்றவாறு அது செயலாற்ற வேண்டும். கிறிஸ்தவ இயக்கமாகிய திருச்சபை கடவுளது நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமாஞல் அதன் மக்கள் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டுமென்பதை இனி ஆராய்ச்சி செய்வோம்.

(அ) அன்பும் ஒற்றுமையுமுள்ள மக்கள்

1 கொ. 13:8–10; 12:27–31.

தனிக் கிறிஸ்தவனின் வாழ்க்கையைப்பற்றி விவரிக்கும் கட்டத்திலல்ல, சபையின் வாழ்க்கையைப்பற்றி விமர்சனம் கொடுக்கும்பொழுதுதான் பவுல் அப்போஸ்தலன் அன்பைப் பற்றிய அதிகாரத்தை எழுதுகிறார். வேறு சில வேளைகளில் திருச்சபையை ஆண்டவருடைய உடலாகவும், அதன் மக்களை உடலின் உறுப்புக்களாகவும் கற்பனை செய்து உறுப்புக்களிடம் காணப்படும் ஒற்றுமை திருச்சபையிலும் காணப்படவேண்டு மென்று வலியுறுத்துகின்றார்.

1 கொ. 12:12–21.

எபே. 4:1–6.

(ஆ) பரதேசிகளான மக்கள்

2 பே. 2:11.

பிலி. 3:20 (a).

கிறிஸ்தவர்கள் ஒரு நிலையான வாழ்க்கையில் ஈடுபட அழைக்கப்படவில்லை; மாறாக, அவர்கள் ஓர் இயக்கத்தில் பங்கெடுக்கவே அழைக்கப்பட்டுள்ளார்கள். எனவே, அவர்கள் பரதேசிகளுக்கு ஒப்பிடப்படுகிறார்கள். உலகத்தில் பல நாடுகளில் இயக்கங்களாகத் தோன்றியவை பின்பு அரசியல் கட்சிகளாக மாறிவிடுவது நமக்குத் தெரியும். (எடுத்துக்காட்டு: இந்தியாவில் காங்கிரஸ் கட்சி). அந்நிலையில் கட்சிகள் முன்னேக்குடன் பணியாற்றத் தவறுகின்றன. அவற்றை மறுபடியும் இயக்கங்களாகச் செயலாற்றச் செய்வதற்காக அவற்றினுள் தொண்டர் படைகள் தோன்றுகின்றன. ஏனென்றால் ஓர் இயக்கத்தின் நோக்கம் நிறைவேற வேண்டுமானல் அது இயக்கமுள்ளதாக இருக்கவேண்டும். அதில் முன்னேற்றம் இருக்கவேண்டும்.

ஆதி. 12:1.

யாத். 19:1,2.

ஆபிரகாமும் இஸ்ரவேலரும் அலைந்துகொண்டிருந்ததாக நாம் படித்திருக்கிறோம். அது அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பயிற்சி என்றுகூடக் கூறலாம். அல்லது அது தெரிந்து

கொள்ளப்பட்ட மக்கள் அனுப்பப்படுகிற நிலேக்கு அடையாளம் என்று கொள்ளலாம்.

(இ) உலகத்திற்கு விடை சொல்லக்கூடிய மக்கள்

1 பே. 3:15.

கிறிஸ்துவுக்குப்பின் முதல் மூன்று நூற்ருண்டுகளில் திருச்சபை வளர்ச்சியடைந்தது எப்படி தெரியுமா? திறமையுள்ள பேச்சாளராலும் 'ஆவிக்குரிய' கூட்டங்கள் மூலமாகவும் அல்ல. பெரும்பாலும், அடிமைகளான கிறிஸ்தவ மக்கள் மூலமாகவே ரோமாபுரியிலும் மற்றும் பல நகரங்களிலும் மக்கள் கிறிஸ்துவைப்பற்றி கேள்விப்பட்டனர். கிறிஸ்தவ மக்களுடைய வாழ்க்கையில் காணப்பட்ட மாறுதல்களேயும், பண்புகளேயும் உற்றுநோக்கிய உலக மக்கள் அவர்களிடமிருந்த 'நம்பிக்கையைப்' பற்றிக் கேள்விகள் கேட்கலாயினர்.

தற்காலத்தில் கீழ்நாடுகளிலும், மேல்நாடுகளிலும் பல காரணங்களால் நம்பிக்கையற்ற நிலே ஏற்பட்டுள்ளது. இந்த நிலேயில் கிறிஸ்துவே உலகத்தின் நம்பிக்கையென்று நாம் எண்ணிஞலும், அந்த நம்பிக்கையைப்பற்றி உலகம் நம்மிடத்தில் கேள்விகள் கேட்பதில்லே. சில வேளேகளில் நாமே கேள்வி கேட்டுக்கொண்டு, அவைகளுக்கு விடை கொடுகின்ருேம். ஆனுல், நாம் கொடுக்கும் விடைகள் உலகத்தின் தேவைக்கு பொருத்தமற்ற விடைகளாக இருக்கின்றன. அல்லது அவை பொதுமக்களுக்கு விளங்காதவையாக இருக்கின்றன. ஆனுல், நம்மிடத்தில் உறுதியான கிறிஸ்தவ அனுபவமும் அவற்றினுல் தோன்றும் செயல்களுமிருந்தால், இக்காலத்து வாழ்க்கைக்குப் பொருந்தியதும் நம்முடைய நம்பிக்கையைப்பற்றியதுமான கேள்விகளே உலகமே நம்மிடத்தில் கேட்கும். அப்பொழுது சகரியாத்தீர்கனின் கூற்று நிறைவேறி உலக மக்கள் யாவரும் கடவுளே அறியும் காலம் வரலாம்.

சகரியா 8:22,23.

(ஈ) தொண்டாற்றும் மக்கள்

இயேசு நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்தார். பழைய ஏற்பாட்டில் 'பாடுபடும் தாசன்' அல்லது 'கடவுளுடைய பணியாள்' என்று கூறப்பட்டுள்ள சொற்ருெடர்கள்

அவரையே குறிக்கிறது என்று நிச்சயம் கொள்ளும் அளவுக்கு அவர் பணி செய்தார். எனவே அவர் 'அடிமையின் ரூபம்' எடுத்தார் என்று கூறப்பட்டுள்ளது. 'பிறருக்காகவே வாழ்ந்த மனிதன்' என்று பான்கோபர் அவருக்குப் பெயர் கொடுக்கிறார். திருச்சபையும் பிறருக்காகவே இயங்கவேண்டிய ஓர் 'ஆசாரியக் கூட்டம்.' மற்றச் சங்கங்களெல்லாம் உறுப்பினர்களின் நலன்களில் மட்டுமே அக்கறை கொண்டிருக்கின்றன. மக்களின் நலனுக்காகவே உலகத்தில் நிறுவப்பட்டுள்ள ஒரே சங்கம் திருச்சபையென்று வில்லியம் டெம்பிள் கூறியுள்ளார்.

மா. 10:45.

எபே. 4:11,12; 4:7–13.

ஊழியம் செய்வதற்காகவே திருச்சபைக்கு வரங்கள் கொடுக்கப்படுகின்றன. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சமுதாயத்திலும், உத்தியோகத் துறைகளிலும் உழைக்கும்படி அழைக்கப்பட்டவர்கள். அவர்களை ஊக்குவிக்கவும், அவர்களுக்குப் பணியாற்றுவதற்குத் தேவையான அறிவையும் பயிற்சியையும் கொடுப்பதற்கும் குருக்கள் போன்ற ஒரு சிலர் திருச்சபைக்குள் இருக்கிறார்கள்.

3. தூது செல்லத் துணைக் கருவிகள்

எந்த இயக்கத்திலும் பயிற்சி தேவை. 'அசடுகள்' என்று கருதப்படுகின்றவர்களும் இராணுவப் பயிற்சி மூலம் வீர நடை போட்டுப் போர் முனைக்குச் செல்லும், நாட்டின் காவலராக ஆகிவிடுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். பயிற்சியின் மூலமாக அவர்களுக்குத் தேவையான அறிவும், திறமைகளும், போர்க் கருவிகளைப் பயன்படுத்தும் சக்தியும் கொடுக்கப்படுகின்றன.

தூது செல்ல இணங்கிய கிறிஸ்தவ மக்களும் தங்கள் பணியை நன்முறையில் செய்யப் பயிற்சி பெறவேண்டும். அவர்களுக்கும் கருவிகள் தேவை.

1. பரிசுத்த ஆவியும் அவருடைய ஈவுகளும்

பரிசுத்த ஆவி தேவையென்பதைப் பொதுவாக எல்லாக் கிறிஸ்தவ மக்களும் ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆனால் 'பரிசுத்த ஆவி உடையவர்களாய் இருப்பதென்றால் என்ன?' என்பதைப்பற்றி அவர்களுக்குள் கருத்து வேற்றுமைகள் பல இருக்கின்றன.

அப். *2:1–14, 38–40, 44–47* (a).

1 கொ. *13:8–10.*

கலா. *5:25.*

இந்த வாக்கியங்களில், பரிசுத்த ஆவி தரப்படுவதில் நான்கு வகைகள் அல்லது பிரிவுகள் இருப்பதை நாம் காண

லாம். (அ) மனம் மாறும் அல்லது திசை திரும்பும் அனுபவம். (ஆ) இதற்குரிய வெளி அடையாளங்கள். (இ) வரங்களைப் பெறுதல். (ஈ) புதிய வாழ்க்கையும் செயலாற்றலும். இவற்றுள் தற்காலிகமானவை எவையென்றும், நிலையானவை எவையென்றும் நாம் சிந்தனை செய்யவேண்டும். பரிசுத்த ஆவி தரப்படுதலில் இன்ன அடையாளங்கள்தாம் எப்பொழுதும் காணப்படவேண்டும், அல்லது இன்னின்ன வரங்கள்தாம் சிறந்தவையென்று கூறுவது தவறாகும். அப்படிச் செய்வது, பரிசுத்த ஆவியைக் கட்டுப்படுத்த, அல்லது அதற்குச் சட்டங்களை விதிக்க முற்படுவதாகும். குறிப்பாக, இயேசுவின் வாழ்க்கையில் காணப்படாதவற்றை 'இன்றியமையாதவை' என்று கூறுவது முற்றும் தவறாகும்.

பழைய ஏற்பாட்டில் ஒரு குறிப்பிட்ட வேலைக்கும், காலத்திற்கும் ஆவி கொடுக்கப்பட்டது. தீர்க்கர்கள், பொன் வெள்ளி வேலை செய்பவர்கள், ஆளும் நியாயாதிபதிகள் போன்று பல்வேறு பணிகளில் ஈடுபட்ட மக்களுக்குத் தேவையான அளவுக்குத் தேவையான காலங்களில் பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. எனவே ஆவி இப்படித்தான் வேலை செய்யுமென்று நாம் வரையறுத்துக் கூறக்கூடாது.

யோ. 3:8.

ஆதித் திருச்சபையிலேயே பரிசுத்த ஆவியையும், ஆவியின் வரங்களையும் பற்றித் தவறான எண்ணங்களும், தற்பெருமையும் உண்டாயின. அப்பொழுது வெளி அடையாளங்களை வரங்களாகக் கருதுவதையும், ஒரு வரத்தை மற்றவைகளுக்கு மேலாக உயர்த்துவதையும் பவுல் கண்டித்துத் திருச்சபையில் பல்வேறு வரங்கள் தேவை என்பதைக் கிறிஸ்தவ மக்களுக்கு உணர்த்தினர்.

1 கொ. 14:5,6, 12–14. 22,23,33.

எபே. 4:11,12.

மிஷனரிமாரில் ஒருவராவது வேற்று மொழியைக் கற்காமல் அம்மொழியில் பேசினதில்லை. ஆனால் பிற மொழிகளை எளிதில் கற்றுக்கொள்ள அவர்களில் பலருக்கு வரம் கொடுக்கப்பட்டது. அவ்வரத்தைப் பெறாதவருக்கு வேறு வரங்கள் சிறப்பாகக் கொடுக்கப்பட்டன.

ஆவியின் வரங்களைவிட ஆவியின் கனிகள் சிறந்தவை அல்லது மிகுதியாகத் தேவையானவை என்பதையும் பவுல் எடுத்துரைக்கிருர்.

கலா. *5:16, 21–25.*
1 கொ. *12:31; 13:1,2.*

பரிசுத்த ஆவி தேவைதான். ஆனால் பரிசுத்த ஆவி மக்களுடைய எண்ணங்களின் மூலமாகவும், முயற்சிகளின் மூலமாகவுமே செயலாற்றுகிருர். அவர் நம்மைச் 'சகல சத்தியத்திற்குள்ளும்' வழி நடத்துவது உண்மையே. ஆனால் நாம் அதற்காக முயற்சி செய்து, உழைக்க ஆயத்தமான அளவிற்கே நாம் உண்மையை அடைவதற்கு அவர் நம்மை வழி நடத்துகிருர்.

2. அறிவு

(அ) நம்முடைய மார்க்கத்தைப்பற்றிய அறிவு

இதைப் பவுல் 'குமாரனைப்பற்றிய அறிவு' என்று குறிப்பிடுகிருர். இத்தகைய அறிவு கிறிஸ்தவச் சபைகளில் இல்லாததைப்பற்றி பவுல் மனநோவு அடைவதைக் கீழ்க்கண்ட வசனங்களில் காண்கிறேம்.

அப். *2:42.*
எபே. *4:13.*
ரோ. *10:2.*
1 கொ. *15:34* (b).

இந்த அறிவு திருமறை வாயிலாகவும், திருச்சபையின் வாயிலாகவும் நமக்குக் கிடைக்கின்றது. வேதாகமம் ஒரு வகையில் எளிதாகக் கற்றுக்கொள்ளக்கூடிய புத்தகமானாலும், மற்றொரு வகையில் நோக்கினல் அது விளங்கிக்கொள்வதற்கு அரிய புத்தகம். அதற்கு விளக்கமாகக் கணக்கற்ற துணை நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அதன் உண்மைகளை உணரத் திருச்சபையில் மக்கள் பெற்றுள்ள அனுபவமும் பயன்படுகின்றது. இவ்வளவு வாய்ப்புக்கள் இருந்தாலும், நம்முடைய சபைகளில் கிறிஸ்தவ அறிவு மிகவும் குறைவு என்றே சொல்ல வேண்டும். சரியானபடி கற்பிக்கப்படாததால், கடவுளுடைய சித்தத்தையும், ஆட்சியையும், திருச்சபையையும், திருமறை

யையும் பற்றிப் பல தப்பெண்ணங்கள் மக்கள் மனதில் குடி கொண்டுள்ளன.

எனவே, இவை யாவற்றையும்பற்றிய அறிவு தேவை. ஆனால் அறிவைப்பற்றி நாம் இறுமாப்புக்கொண்டால் பரிசேயரைப்போல் தகாத மனப்பான்மையுள்ளவர்களென்று பழிக்கப்படுவோம்.

(ஆ) நன்மை தீமையைப்பற்றிய அறிவு

மத். 5:21,22,38,39.

ஓரளவுக்கு இது, 'குமாரனைப்பற்றிய அறிவை, அடிப்படையாகக் கொண்டதே. 'பரிசேயரும் வேதபாரகரும் இந்த அறிவும், நியாயப்பிரமாணமும் ஒன்றே என்று கருதி வந்தனர். பவுலும்கூட மனமாறுவதற்கு முன் இவ்வாறே எண்ணி வந்தார். அதனால்தான் அவர் கிறிஸ்தவர்களை அழித்துவிடவேண்டும் என்று திட்டமிட்டார். ஆனால் கிறிஸ்துவை அறிந்தபின் நியாயப்பிரமாணத்தின்மேல் அவருக்கு இருந்த உறுதி கிறிஸ்துவிடம் திரும்பிற்று. நியாயப் பிரமாணம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்காக மட்டுமே கொடுக்கப்பட்டதென்று அவர் உணர்ந்தார்.

கலா. 3:17,18,24–26.

'நியாயப்பிரமாணத்தைக் கடவுளுடைய ஆதிக்கத்திற்கு மேலாக உயர்த்துவதானது கிறிஸ்துவின் மீட்பையே தேவையற்றதாக்கும் நோக்குடையது' என்று அவர் கூறுகிறார்.

கலா. 2:21.

ஒவ்வொரு நிலையிலும் நிகழ்ச்சியிலும் அடங்கியுள்ள நன்னெறிச் சிக்கல்கள் யாவை என்பதைக் கிறிஸ்தவர்கள் நன்கு உணரவேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு கிறிஸ்தவன் ஈடுபட்டுள்ள தொழிலில், வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெறும்பொழுது, அங்கு அறநெறிக் கொள்கைகளும், மானிட உரிமைகளும் எவ்வாறு தாக்கப்படுகின்றன என்று அவன் அறியவேண்டும். அல்லது, 'குடிப்பதனாலோ, சூதாட்டத்தில் இறங்குவதாலோ, அவருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் ஏற்படக்கூடிய விளைவுகள் யாவை'

என்பதை 'அறியவேண்டும்.' ஆனால் 'புகை பிடிப்பதும், திரைப்படக் காட்சிகள் பார்ப்பதும், பிற மதத்தினருடைய விழாக்களில் கலந்துகொள்வதும் தவறு' என்றெல்லாம் புதுச் சட்டங்களை உண்டுபண்ணுவது, இயேசுவும், பவுலும் கண்டித்த பரிசேயருடைய வழிகளைப் பின்பற்றுவதாகும்.

(இ) கடவுளைப்பற்றியுள்ள அறிவை வாழ்க்கைக்குப் பொருத்துவது

இக்காலத்தில் சமுதாயத்திலும், தொழில்துறைகளிலும் எழும் சிக்கல்கள் மிகவும் குழப்பமானவை. கிறிஸ்தவர்களாக நாம் அவற்றிற்கு விடை காணவேண்டுமென்றால் நாம் அவற்றின் முழுத்தன்மையை அறியவேண்டும். அத்துடன் கிறிஸ்தவ அறிவுக்கும், அவற்றிற்குமுள்ள தொடர்பையும் ஊன்றி ஆராய்ச்சி செய்யவேண்டும். 'புத்துயிரின் அறிகுறி' (Signs of Renewal) என்ற தலைப்புக்கொண்ட ஒரு சிறிய புத்தகத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

> 'நம்முடைய உள்ளுணர்ச்சிகளை மட்டும் துணையாகக் கொண்டு இக்காலத்தில் நாம் உலகத்தில் எப்படி கிறிஸ்தவராக வாழ்வது என்று அறிந்துகொள்ளமுடியாது. சபையின் பொது வாழ்க்கையில் பங்கு பெறுவதாலும்கூட அதை நாம் தெரிந்துகொள்ள முடியாது. அதைக் கற்றுக் கொள்ளவேண்டும். கடவுளைப்பற்றிய நற்செய்தியை ஆழ்ந்து ஆராய்வதுடன், மனிதனையும் சமுதாயத்தையும் பற்றி அறிந்துகொள்ளுவதற்குக் கருவிகளாக அமைந்துள்ள இயல்களைப் பயன்படுத்துவதே அத்தகைய கல்வியைப் பெறும் முறையாகும்.'

3. ஆட்சி

திருச்சபையின் ஆட்சி தூதுப்பணிக்கு அடிகோலும் ஒரே நோக்கமுள்ளதாக இருக்கவேண்டும். திருச்சபை தோன்றிய காலத்தில் அதில் அதிகாரிகளும், மேலதிகாரிகளுமில்லை. தங்களுக்கு ஓர் அரசன் வேண்டுமென்று இஸ்ரவேலர் சாமுவேலரிடம் கேட்டபொழுது, 'ஒரு அரசன் எவ்வாறு வன்முறையாக அதிகாரம் செலுத்தக்கூடும்' என்பதுபற்றி சாமுவேல் அவர்களுக்கு எடுத்துரைத்தான். கொடுங்கோல் ஆட்சி நிகழாமல் தடுக்க, அரசனை நியமனம் செய்யாமலிருப்

[illegible] என்று அவன் ஆசிரியர் கூறினன். அம்முறையே சீடர்களுள் 'எவன் பெரியவன்' என்ற வாக்குவாதம் எழுந்த பொழுது இயேசுவுங்கூடத் தம்முடைய அடியார் அதிகாரம் செலுத்தும் விருப்பமுடையவராக இருக்கக்கூடாதென்று அவர்களுக்குக் கூறியிருந்தார்.

1 பேது. 5:1-4.

லூக். 22:24-26.

கிறிஸ்தவ மார்க்கம் ரோம அரசாங்க மார்க்கமாக நிலைபெற்றபின், அரசாங்கத்திற்போலவே திருச்சபையிலும் அதிகாரிகளும் சர்வாதிகாரிகளும் ஏற்பட்டனர். எடுத்துக் காட்டாக, 'போப்பானவர் முழு அதிகாரமும் உள்ளவர் என்றும், அவர் மக்களிடத்திலிருந்து எந்த உரிமையையும் எடுத்துவிடலாமென்றும், இவ்வுலக, மறுவுலகப் பேராக அவருக்கே உரியது' என்றும் திருச்சபைச் சட்ட வல்லுநரான 'டூரண்டுஸ் (Durandus) என்பவர் விளக்கம் கொடுத்தார். ஆனால் சபையில் ஆட்சிப் பொறுப்பு உள்ள யாவரும், இயேசுவையே தங்களுக்கு முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். அவரை அவருடைய அடியார்கள் 'தலைவரெ'ன்றும் 'ஆசிரியரெ'ன்றும் அழைத்தார்கள். ஆனாலும் அவர், தாம் 'ஊழியம்கொள்ள வரவில்லை' என்றும் 'ஊழியம் செய்யவே வந்ததாகவும்' கூறினர்.

நம்முடைய சபைகளில் மிகுதியான அதிகாரமும், கண்டிப்பான சட்டங்களும், ஒடுக்கும் தன்மையுள்ள மத்திய ஆட்சியும் (centralised administration) இருப்பதை நாம் அறியலாம். இவை பெரும்பாலும் ஒரு வகுப்பாருடைய அதிகாரத்தை வலுப்படுத்தும் தன்மையுடையவை. ஆனால், கிறிஸ்தவ சபையானது, ஊழியர் படையாகப் பணிசெய்ய வேண்டுமானல் நம்முடைய பரிபாலன முறை அதற்கேற்ற வழியில் மாற்றி அமைக்கப்படவேண்டும்.

ஒழுக்க விதிகள்

இவை மக்களை அடிமைப்படுத்தும் தன்மையுள்ளனவாக இருக்கக்கூடாது என்பதை இயேசுவானவர் வலியுறுத்தினர். அத்துடன் அவை சடங்காச்சாரங்களாகவும் (formalities) அமையலாகாது என்பதையும் அவர் வற்புறுத்தினர். ஒய்வு

நாள் ஒழுங்குகள், கொர்பான் காணிக்கை முதலியவற்றின் அடிப்படையில் இயேசு இவற்றை விளக்கிக் கூறினார்.

மா. 2:27.

அா. 13:15,16.

மா. 7:11–13.

மத். 23:23–25; 15:1–3.

ஆட்சியைப்போலவே ஒழுக்க விதிகளும் மக்களைக் கட்டுப் படுத்தும் தன்மையுள்ளவைகளாக இருக்காமல், அவர்கள் பயனுள்ள வாழ்க்கை நடத்துவதற்குத் துணையானவைகளாக இருக்கவேண்டும். எனவே, திருச்சபையில் இப்பொழுது உள்ள ஒழுங்குகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து, நலமானவற்றை மட்டும் வைத்துக்கொள்வது நமது கடமையாகும்.

4. அழைப்புக்கள்

(அ) குருத்துவ அழைப்பு

சபைகளிலே அத்தியட்சர்களும் குருக்களும் இருப்பது தேவையே. ஆனால் அந்த அமைப்பு தன்னில்தானே தூய தன்மையோ, உயரிய பண்போ கொண்டது என்று நாம் கூற முடியாது.

எபே. 3:15.

அப். 14:23.

குருமார் தலைவர்களாக இருக்கவேண்டும் அல்லது அவர்கள் மட்டும் கூடித் திட்டங்கள் வகுக்கவேண்டுமென்று நினைப்பது தகாது. தம்மைப்போலப் பணிசெய்யவே இயேசு அவர்களை அழைக்கிறார். எனவே அவர்கள் ஒரு தனி வகுப்பாக அல்லது இனமாகத் தங்களைப் பிரித்துக்கொள்ளக்கூடாது.

அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சிறப்பான பொறுப்பு இதுதான்: சமுதாய வாழ்க்கையிலும் பல தொழில்களிலும் ஈடுபட்டுள்ள திருச்சபையின் மக்கள், தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் கிறிஸ்துவின் ஒளியும் ஆற்றலும் விளங்குமாறு வாழ அவர்களை ஊக்குவித்து அதற்கெனப் பயிற்சி கொடுத்தல். இத்தகைய பொறுப்பில் அவர்கள் தவறினால் திருச்சபையில் வழிகாட்டிகளாக இல்லாமல் வழி விலக்குபவராக இருப்பார்கள்.

அப். 20:28.

எபே. 2:8.

(ஆ) குழுக்களும் ஆட்சி அமைப்புகளும்

திருச்சபையின் பணியையும், மற்றும் விவகாரங்களையும் ஒழுங்குபடுத்தக் குழுக்களும் பிற அமைப்புக்களும் தேவை. ஆனால் இவைகளும்கூடத் தூதுப்பணியை நன்முறையில் செய்வதற்கு அடிகோலும் கருவிகளாக மட்டும் இருக்கவேண்டும். அதிகாரத்தின்மேல் பிரியமுள்ள சிலருக்கு அதிகாரம் செலுத்தும் வாய்ப்பைத் தருபவையாக அவை அமையக்கூடாது. அல்லது, நமதாண்டவரையும், அவருடைய அடியாரையும் ஒடுக்கிய சங்கங்களைப்போல் அவை செயலாற்றலாகாது.

மா. 15.
அப். 5:21; 28:30,31.
அப். 15:5, 29 (a).

(இ) நிறுவனங்கள்

இஸ்ரவேலருக்குள் பல நிறுவனங்கள் இருந்தன. பலிகள், பண்டிகைகள், நீதி வழங்கும் மூப்பர்கள், சட்டங்கள், அவைகளில் சில. ஒருகாலத்தில் ஓரளவுக்கு அவை கடவுள் வழிபாட்டிற்கும், ஆத்தும வளர்ச்சிக்கும், சமுதாயத்தில் நீதி நிலவவும், பயனுள்ளனவாய் இருந்தன. இறுதியில் அவைகளே குறிக்கோளாக அமைந்தன. இதனால் பல தீமைகள் விளைந்தன.

லூ. 22:52,53.
மத். 27:64–66.

திருச்சபையிலும் பள்ளிகள், அடிப்படைச் சட்டங்கள், அத்தியட்சாதீன அலுவல்கள், ஆண்டுவிழாக்கள் முதலியவை முக்கியத்துவம் பெறுகின்றன. ஆனால் அவை யாவும் திருச்சபையின் தூதுப்பணிக்கு அடிகோலும்படி பயன்படுத்தப்படவேண்டும். இல்லையேல் அவை அப்பணிக்குத் தடையாக அமைவது உண்டு.

ஏசா. 1:11–15.
பிர. 3:3.

திருச்சபை ஓர் இயக்கமாகப் பணியாற்ற வேண்டியதிருக்கிறது. ஆகவே அதன் நிறுவனங்கள் தேவைக்குத் தக்கவையாகவும் எளிதில் மாற்றி அமைக்கப்படக்கூடியவையாகவும்

இருக்கவேண்டும். அத்துடன் தங்களை மட்டுமே பாதுகாக்கும் தன்மையுள்ளனவாக இல்லாமல், பணி செய்வதற்கு அடிகோலும் தன்மையுடையனவாகவும் இருக்கவேண்டும். திருச்சபையின் மக்களை ஆலயத்திற்குள்ளும், திருச்சபையின் கூட்டு வாழ்க்கைக்குள்ளும் மட்டும் கொண்டுவராமல் அவர்கள் சமுதாயத்திலும் தொழில்களிலும் கிறிஸ்தவராக ஈடுபடவும் செய்யவேண்டும். கடவுள் உயிருள்ளவர். அவர் உயிருள்ள அமைப்புக்களையே பயன்படுத்துவார்.

அனைத்துலகக் கிறிஸ்தவ சபைகளின் ஒரு குழுவின் அறிக்கையில் கீழ்க் கண்டவாறு கூறப்பட்டுள்ளது:

> 'திருச்சபை ஒருநாளும் ஒரே வகையான அமைப்புக்குள் அமையலாகாது. கிறிஸ்தவர்களில் ஒவ்வொரு வகுப்பினரும் தங்களுடைய தொண்டுக்குப் பொருந்திய அமைப்பு யாதென்று கண்டுபிடிக்க வேண்டும்.'

5. தூது செல்லல்

(அ) பணியின் தன்மை

(1) தூதுப்பணி கடவுளுடன் சேர்ந்து செய்யும் பணி. *யோ. 5:17.*

மத். 25:34–40; 22:32.

(2) எனவே கடவுள் என்ன நோக்கங்களுள்ளவராக இருக்கின்றாரோ அவற்றையொட்டியே நாமும் பணி செய்ய வேண்டும்.

சங். 128:2.

ஏசா. 65:22,23.

சங். 126:6; 104:23.

கடவுள் மனிதனுடைய உழைப்பைப்பற்றியும், உழைப்பின் பலனைப்பற்றியும் கருத்துடையவர். மனிதனுடைய ஆத்துமா மட்டுமே நல்ல நிலையில் இருக்கவேண்டுமென்று எண்ணுபவர் அல்லர்.

(3) இதனால் தூதுப்பணி நம்மை உலக வாழ்க்கையில் ஈடுபடுத்துகிறது.

'திருச்சபையின் பொது உறுப்பினரின் அழைப்பை மீண்டும் அறிவதென்றால் அது உலகத்தில் அவர்கள் ஈடுபடவேண்டும் என்று உணர்வதாகும். இரண்டாம் தரமான பொறுப்பாக இன்றி, முதல் தரமான பொறுப்பாக அவர்கள் வீட்டிலும், பள்ளியிலும், தொழிற்சாலையிலும் அலுவலகத்திலும், கிறிஸ்து

னுடைய சித்தத்தைக் கண்டுபிடித்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.'

என்பது ஒரு கிறிஸ்தவப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

மற்றொரு நூலில் கூறியுள்ள இரண்டு செய்திகளை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

1. நம்மைச் சுற்றியுள்ள மக்களின் கறைப்பட்ட வாழ்க்கை நம்மை அணுகாதபடி நம்மை நாம் காத்துக் கொள்ளலாம். அப்படியானால் கறைபடாத நிலையிலேயே நாம் வாடி அழிந்துபோவோம்.

2. தேவை நிறைந்ததும் பாவமுள்ளதும், பயங்கரமானதுமான உலகத்தின் அழுக்கான தரையில் நாம் நம்மையே புதைக்கலாம்; அப்படி புதைக்கப்பெற்றால் நாம் வேர் கொண்டு, மரமாகி, கனி கொடுக்கலாம்.

(i) சமுதாய, பொருளாதார முயற்சிகளில் ஈடுபடுதல்

அனைத்துலகக் கிறிஸ்தவ சபைகள் மன்றத்தின் சார்பாக லக்னோ நகரத்தில் கூடிய குழுவொன்றின் அறிக்கையில் கூறப்பட்டிருப்பது இதுதான்!

'தொழிற்சாலைகளிலும், கடைகளிலும், அலுவலகங்களிலும் பண்ணைகளிலும், அரசாங்க அமைப்புக்களிலும், எண்ணற்ற இல்லங்களிலும், பத்திரிகைகளிலும், வானொலிகளிலும், தொலைக்காட்சியிலுமே இன்று கிறிஸ்தவ நம்பிக்கையின் போராட்டங்கள் நடக்கின்றன.'

இந்தப் போராட்டங்களில் எப்படி கிறிஸ்தவர்கள் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும். ஆனால் முதலில் இவை நம்பிக்கையினால் எழும் போராட்டங்கள்தானா என்பதை அவர்கள் அறியவேண்டும். பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் இந்தப் பொறுப்பு வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீதி. 16:11; 31:10,15.

ஆமோஸ் 2:6–8.

மீகா 3.

(ii) அன்றாட வேலையில் பொறுப்பு

ஒருவர் தனது நலத்திற்காகவே தொழில் புரிகிறார். ஆகவே ஒவ்வொருவரும் தாங்கள் எந்த தொழிலைச் செய்தாலும் அத்

தொழிலின் நோக்கம் முழுமையாக நிறைவேறும் முறையில் அவர்கள் செயல்படவேண்டும்.

தொழிலின் முக்கியத்துவம் வேதாகமத்தில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.

1 தெச. 4:11 (அ).

2 தெச. 3:10.

தொழிலுக்கும் விற்பனைக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும் நாம் பல இடங்களில் வாசிக்கிறோம்.

நீதி. 20:4.

நீதி. 31:19, 24.

தொழிலின் முக்கியத்துவத்தின் காரணமாகத் தொழிலுக்குத் தடையானவற்றை நீக்கும் நோக்கத்துடன் சில விதிகள் கொடுக்கப்பட்டிருப்பதையும் நாம் பார்க்கலாம்.

உபா. 24:6.

தொழில் செய்பவர்களில் பல்வேறு சிக்கல்களும் தீமைகளும், தவறான முறைகளும் நிறைந்துள்ளன. கிறிஸ்தவர்கள் அவைகளால் கறைப்படாதபடி தங்களை பாதுகாத்துக் கொள்ள முயற்சி செய்வதுடன், அந்த இடங்கள் தூய்மைப் படும்படி முயற்சி செய்யவேண்டும். அவைகளில் செய்யப் படும் பணி மக்கள் நலனுக்கு அடிகோலுவதாகவும் முயற்சி செய்யவேண்டும்.

(4) தொழிற்பணியின் ஏழையாகப் புரட்சி உண்டாகும்

அப். 16:19-24; 19:23-29.

ஆனால் நாம் பொதுவாகப் புரட்சியை விரும்புவதில்லை. எனவே, சிறிது சிறிதாக, அல்லது மிகவும் மெதுவாக மாறுதல்கள் ஏற்படவேண்டுமென்று விரும்புகிறோம். ஒரு குறிப்பிட்ட வேகத்துடன் தரையில் ஓடிய பின்தான் ஆகாயவிமானம் தரையைவிட்டு எழும்பும். இப்பொழுதுள்ள கிறிஸ்தவ சபைகளின் முயற்சி மிகப் பெரும்பாலும், பறக்கும் வேகத்தை அடையாமல், தரையிலேயே ஓடிக்கொண்டிருக்கும் விமானங்களின் நிலையில் உள்ளது. எனவேதான் சென்ற ஆண்டு உப்சாலா நகரத்தில் கூடிய கிறிஸ்தவ மாநாட்டில், நாம் முன்னேற்றத்தை விரும்பினால், குழப்பமான நிலைக்கும் பயப்

படக்கூடாது என்றும், வன்முறையில் நடக்கும் புரட்சியைக் கூடச் சில வேளைகளில் ஆதரிக்க வேண்டுமென்றும் சிலர் கூறியுள்ளனர்.

(5) தூதுப்பணியின் மதிப்பு

தூதுப்பணி செய்பவர்கள் ஊதியத்தை எதிர்பார்ப்பது இயல்பு. ஆனால் உலகத்தில் மற்ற மக்களுக்குக் கிடைக்கின்ற ஊதியங்களைப் போன்றவையல்ல அவை. யோனாவைப்போல அவர்கள் தங்கள் பெருமையை இழக்க நேரிடலாம்; அல்லது கடவுள் தங்களைக் கைவிட்டு விட்டார் என்றெண்ணும் அனுபவத்திற்குள் வரலாம்.

யோனா 4:3, 8 (b).

கோதுமை மணி நிலத்தில் புதைக்கப்படுவது போன்றது கிறிஸ்தவப் பணி. எனவே மக்கள் அதைச் செய்யத் தயங்குகின்றனர். அதற்குப் பதிலாகத் துன்பமின்றி வாழவேண்டுமென்ற நோக்கத்துடன் தாங்களே ஒரு பணியைத் தெரிந்தெடுத்துக் அதைக் கிறிஸ்தவப் பணி என்று அழைத்துத் தொண்டு செய்ய சிலர் முற்படுகின்றனர்.

லூ. 9:23,24.
அப். 14:19,21; 21:30,31.
2 கொ. 11:24–27.

(ஆ) பணி மனை

திருச்சபையின் மக்கள் சபைக்கு வெளியில் சென்று பணி புரிய வேண்டுமென்று இங்கே பலமுறை கூறப்பட்டுள்ளது. ஆனால் அப்பணியைச் செய்வதற்குத் திருச்சபையின் வாழ்க்கையினுள் அவர்கள் வலிமை பெறவேண்டும். வீட்டை விட்டு வெளியில்போய் உழைக்கும் மக்கள் உண்ணவும், தங்கள் உடல் வலிமையைப் புதுப்பித்துக் கொள்ளவும் வீடு திரும்புகின்றனர். அதைப்போலவே தூதுப்பணியைச் செய்வதற்கும், திருச்சபையின் அமைப்புக்குள் வருவதும் அவற்றை விட்டு வெளியே செல்வதும் ஆகிய இரண்டுமே தேவைப்படுகின்றன. அப்பணியைச் செய்வதற்கு வேண்டிய ஆர்வம், நம்பிக்கை, அறிவு ஆகியனவற்றைத் திருச்சபை தன்னுடைய மக்களுக்குக் கொடுக்கவேண்டும்.

1. வழிபாடு

ஆதித் திருச்சபையில் வழிபாடும், திருப்பணிகளும் எளிய முறையில் அமைந்திருந்தன. ஒரு கடுமையான ஒழுங்கிற்குள் அல்லது சட்டங்களுக்குள் அவை அமைக்கப்படவில்லை.

ஓர. 4:16,17 (a).

அப். 2:42,46,47 (a); 12:12 (b).

ஆனால் வழிபாடு வெறும் ஒழுங்கு முறையாக மட்டும் ஆகிவிட்டால் அதனால் பல தீங்குகள் விளையக்கூடும். அத்துடன் கிறிஸ்தவப் பண்புகளை வளர்க்காத வழிபாடும். நீதியின்மேல் ஆர்வத்தை ஊட்டாத சபை கூடுதலும் வீணான வையாகும். எனவே தொழிலுக்கும், தொழுகைக்குமிடையே உள்ள பிளவை நாம் அகற்றவேண்டும்.

1 கொ. 11:27–29; 14:26.

ஆமோஸ் 5:21–25.

நம் வழிபாடு நம்மை அறிவிலும் அறத்திலும் வளரச்செய்து நம்முடைய பணியைச் செய்ய நமக்கு வலிமையைத் தர வேண்டும். இத்தகைய வளர்ச்சி அடையாத கொரிந்து சபையைப் பவுல் கண்டிக்கிறார்.

1 கொ. 3:1–4; 11:20–22, 34 (a).

2. கூட்டு வாழ்க்கை

திருச்சபையின் மக்கள் ஒற்றுமையுள்ளவர்களாக இருப்பதாலும் வலிமையைப் பெறுகிறார்கள். பழைய ஏற்பாட்டில் ஒற்றுமையானது இனத்தைப் பொறுத்ததாக இருந்தது. ஆனால் திருச்சபையில் ஒற்றுமை ஒரே நம்பிக்கையையும் பொதுவான கடவுள் பற்றையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்கிறது.

அப். 4:31,32.

1 பே. 2:4,5.

ஒற்றுமை என்பது ஓர் உணர்ச்சியாக அல்லது இனப்பற்றாக மட்டும் இருக்கலாகாது. அப்படியாயின் அது தீங்குக்குக் காரணமாக முடியும். கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் தங்களை ஒரு தனிச் சமுதாயமாகக் கருதி வந்ததால்தான் அவர்கள் உலகத்தின் மீட்பிற்காக உழைக்க இயலாதவர்களாக வாழ்ந்

துள்ளனர். ஆனால் அவர்களுடைய கூட்டு வாழ்க்கையானது அவர்கள் சமுதாயத்தில் புத்துயிர் ஊட்டும் தன்மையுள்ளதாக இருக்கவேண்டும். இதை குறித்து:

> 'இதுகாறும் இருந்து வந்துள்ள சபையின் நெருங்கிய கூட்டு வாழ்க்கை ஒரு சிக்கலாகவும், சபையைப் பற்றும் ஒரு நியிர்வாதமாகவும் மாறியுள்ளது. ஏனெனில் கிறிஸ்தவராக அவர்கள் உலகில் செயலாற்றுவதை அது தடுக்கின்றது'

என்று ஓர் அறிஞர் கூறியுள்ளார்.

3. போதனை

கருவிகளைப்பற்றிய பகுதியில் அறிவின் தேவையைப்பற்றி சிலவற்றை நாம் கண்டோம். திருச்சபையின் மக்களுக்கு வேண்டிய போதனையைக் கொடுப்பது திருச்சபையின் கடமை. ஓரளவுக்கு, குருமார் அதைத் தங்களுடைய பொறுப்பாகக் கருதவேண்டும்.

மீகா 4:2.
அப். 20:28–30.

ஆனால் குருக்களோடு, திருச்சபையில் அதற்குத் தகுதியுள்ள மக்களும் சேர்ந்து போதனை கொடுக்கவேண்டும். தங்களுடைய தேவைக்குத் தக்கபடி அடிக்கடி மக்கள் குழுக்களாகக் கூடித் தாங்களே சிந்தனை செய்வதும், அறிவைத் தேடுவதும் தேவை. ஒரு சிறிய நூலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

> 'பல துறைகளில் இறையியல் அதிகாரத்துடன் பேச முடியாது . . . இரு வழிகளில் அதாவது, இன்றைய உலகை அறிந்துகொள்ளவும், அதன் அடிப்படையில் அறிவோடிசைந்த முறையில் சக்தியுடன் சமுதாய வாழ்க்கையோடு தொடர்புகொள்ளவும் . . . முயற்சி தேவை. 'உலகப் பணி'யைச் செய்துவரும் மக்களுடைய கிறிஸ்தவ அனுபவமே புதிய போதனைக்கு அடித்தளமாக அமையவேண்டும். இறையியல் வல்லுநரும் அறிவியல் உலகிலுள்ள வல்லுநரில் கிறிஸ்தவருமானவரும் சேர்ந்து

நெடுங்காலம் ஒத்துழைத்துப் புகட்ட வேண்டிய அறிவு பெரிதும் வளரவேண்டும்.'

எனவே, இரேமர் பண்டிதர் கூறியபடி:

'திருச்சபையும் அதன் உறுப்பினரும் ஒரு புதிய குரலுடன் பேசவும், புது வலிமையுடனும், நோக்குடனும் செயலாற்றவும் இக்காலத்தில் ஒத்துழைப்பு இன்றியமையாதது தாகும். வியப்படையத்தக்க அளவுக்கு இறையியல் வல்லுநரும், குருக்களும் சபையின் மற்ற மக்களும் ஒத்துழைக்க வேண்டும்.'

ஆசிரியரின் வேறு நூல்கள்

[illegible]	ரூ. [illegible]
[illegible]	ரூ. [illegible]
The Theology of Chenchiah	Rs. [illegible]

THE MISSION OF CHRIST

By D. A. Thangasamy

[illegible]